Impact Factor (SJIF): 6.092 E-ISSN: 2583-1615

International Journal of Research in Academic World

Received: 15/April/2024 IJRAW: 2024; 3(5):141-143 Accepted: 19/May/2024

# பெரும்பாணாற்றுப்படை காட்டும் சமுதாயம்

*[1]முனைவர் ரா. ரங்கநாதன்

*[1]உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா.

**சுருக்கம்**

மனித சமுதாயத்தைப் பயன்படுத்துவதை இலக்காகக் கொண்டது இலக்கியம் எனப்படும். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு,கலித்தொகை, அகநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, ஆகிய எட்டுத்தொகை நூல்களும், முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை,திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, மலைபடுகடாம் ஆகிய பத்துப்பாட்டு நூல்களும் சங்க இலக்கியங்களாக குறிக்கப்பெறுகின்றன. மனித இனத்தையும், மனத்தையும் பண்படுத்தும் இவ்விலக்கியங்கள் பதிவு செய்துள்ள பண்பாட்டுச் சிந்தனைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**Keywords:** உணவு-கைக்குத்தல் அரிசி-ஊறுகாய்

## முன்னுரை

சமூகத்தில் வாழும் மனிதர்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதில் இலக்கியமும் பங்காற்றுகின்றது. பிறருக்கு அவ்வாழ்க்கையை உணர்த்துவதிலும் இலக்கியம் தன் பணியைச் செம்மையுறச் செய்கிறது. இதனை, "வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுவதும் வாழ்க்கைக்கு தேவையான கருத்துக்களைக் கூறி வழிகாட்டுவதும் இலக்கியம் ஆகும். வாழ்க்கையை மொழிவாயிலாக வெளிப்படுத்துவதே இலக்கியம்" என்னும் (மு.பி.பாலசுப்பிரமணியனின்) கூற்றும் மெய்ப்பிக்கிறது. அவ்வகையில், பத்துப்பாட்டு நூல்களில் சிறந்து விளங்கும் இப்பெரும்பாணாற்றுப்படை காட்டும் சங்ககால மக்களின் வாழ்க்கைமுறைகள், நாகரிகம் பண்பாடு, பழக்கவழக்கங்கள், பல்வேறு தொழில்கள், பொழுது போக்கு, பண்டைத் தமிழர் வாணிபம் ஆகியன குறித்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

## ஐவகை நிலப்பாகுபாடு

பழந்தமிழர்களிடையே இக்காலத்திலிருப்பது போன்ற சாதிவேறுபாடு இல்லை. மக்கள் பாகுபாடு நிலஇயற்கையையும் செய்யும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு இருந்தது. மக்கள் வாழ்க்கை, ஒழுக்கம் முதலியன அவ்வந்நிலங்களுக்கேற்ப பகுக்கப்பட்டிருந்தன. முல்லை நிலங்களில் வாழ்ந்தோர் ஆயர், ஆய்ச்சியர் என்றும், குறிஞ்சி நிலங்களில் வாழ்ந்தோர் குறவன், குறத்தியர் என்றும், மருதநிலங்களில் வாழ்ந்தவர்கள் உழவர், உழத்தியர் என்றும், நெய்தல் நிலத்தில் வாழ்ந்தவர்கள் பரதவர், பரத்தியர் என்றும் அழைக்கப்பட்டனர். முல்லையும் குறிஞ்சியும் தன்நிலை மாறி ஏற்பட்ட பாலை நிலமக்களுக்கு எயினர், எயிற்றியர் என்ற பெயரும் ஏற்பட்டது.

மக்கள், மாக்கள் தாவரம் ஆகியவற்றின் வாழ்வினையே மாற்றியமைக்கும் இருபெரும் இயற்கைக் கூறுகள் காலமும் இடமுமாகும். இவற்றை முதற்பொருள் என்றனர். நிலமாகிய முதற்பொருளில் தோன்றிய மலர்களின் பெயர்களையே அந்நிலங்கள் பெற்றன. திணைகளை ஐந்தாக்கி அவற்றிற்கு உரிப்பொருள் என வழங்கப்பெறும் ஐவகை ஒழுக்கங்களையும் அமைத்தனர்.

அவ்வாறு இயற்கையோடு ஒட்டிய முதற்பொருளையும் உரிப்பொருளையும் வகுத்துக் கொண்ட பண்டைத்தமிழர், அந்நிலங்களில் இயல்பாகத் தோன்றும் மரம், செடி, கொடி விலங்கு, பறவை முதலிய இயற்கைப் பொருள்களாகிய கருப்பொருள்களையும் வகுத்துக் கொண்டனர்.

**உணவும் அதன் முக்கியத்துவமும்**

மக்களுடைய அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம். இவற்றுள் முதலிடம் பெறுவது உணவாகும்.

**"ஆடையில்லா மனிதன் அரைமனிதன்"**

என்பதைப் போலத்தான் உணவில்லா மனிதன் உயிரற்ற மனிதன் என்பதும். உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆற்றலைத் தருவது உணவாகும். உடலுக்கு வலிமையையும் ஆற்றலையும் கொடுப்பது. நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுவது உணவாகும். இந்த உடலில் உயிர் நிலைத்து நின்றால்தான் உடல் அழியாமல் இருக்கும் என

**உடம்பார் அழியின் உயிரார் அழிவர்"**

என்னும் வரிகளில் திருமூலர் தெரிவிக்கிறார். அந்த உடலை அழியாமல் பாதுகாப்பது உணவாகும். ஒரு மனிதன் உணவிற்காக எதை வேண்டுமானாலும் கொடுத்து விடுவான் என்பதை,

**"மானம் குலம் கல்வி வன்மை அறிவுடைமை**
**தானம் தவம் முயற்சி தாளாண்மை-தேனின்**
**கசி வந்த சொல்லியர்மேல் காமுறுதல்**
**பத்தும்**

பசிவந்திடப் பத்தும் பறந்து போகும் "என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. உணவினால் ஏற்படும் பசியைப் பிணியாக நம்தமிழர் உருவகித்தனர். பண்ணன் என்ற வள்ளலை இக்காரணம் பற்றியே, "பசிப்பிணி மருத்துவன்" எனப் புறநானூறு புகழ்கிறது.

ஆதிமனிதனுடைய தொழிலே உணவைத் தேடுவதாக அமைந்தது. காய்கனிகளையும் இறைச்சியையும் பசி தீர்க்க உணவாகப் பயன்படுத்திக் கொண்ட மனிதனே, நாகரிகம் வளரவளர அதனைப் பயன்படுத்தி பல்வேறு உணவாகப் பகுத்து உண்ணக் கற்றுக் கொண்டான்.

"மதங்கள் பலவென்றும் ஆண்டவன் பலர் என்றும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு உணவு மட்டும் எல்லோருக்கும் பொதுவான ஆண்டவன் என்பதை மறுப்பது இல்லை "என்னும் கூற்றும்

**ஆற்றுக்குள் இருந்து அரகரா என்றாலும்**
**சோற்றுக்குள் இருக்கிறான் சொக்கநாதன்"**

என்னும் பழமொழியும் உணவின் முக்கியத்துவத்தைச் சுட்டுகின்றன.

**உணவின் பெயர்கள்**

சோறு பற்றித் தமிழ் இலக்கியங்களில் பல சொற்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**உணாவே வல்சி யுண்டியோதன**
**மசனம் பதமே யிரையா கார**
**முறையே யூட்ட முணவென லாகும்"**

என்ற பாடலடிகள் வழி உணா வல்சி உண்டி ஓதனம் அசனம் பதம் இரை ஆகாரம் உறை ஊட்டம் என்பன உணவின் வேறு பெயர்களாகப் பிங்கல நிகண்டு கூறுகிறது. தொல்காப்பியம் கருப்பொருளைப் பற்றிச் சொல்கின்ற

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**

என்னும் செய்யுளில் உணா என்னும் சொல் உணவினைக் குறிப்பிடுகிறது. பெரும்பாணாற்றுப்படையில் "வல்சி" என்னும் சொல் உணவினைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**உணவும் தமிழ்ச் சமுதாயமும்**

தமிழிலக்கியங்கள் உணவின் தேவையை எடுத்தியம்புவதோடு அந்த உணவை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்ந்ததை பெரும்பாணாற்றுப் படையின் வாயிலாக அறியமுடிகிறது. நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கிய தமிழ் மக்கள், உணவை உண்பதிலும் அதனைப் பக்குவப்படுத்துவதிலும் எல்லோருக்கும் முன் மாதிரியாக விளங்கினார்கள்.

**உணவுப் பழக்கங்கள்**

இக்காலத்தில் மருத்துவ வளர்ச்சியின் காரணமாக புதிய புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு நோய்கள் குணமாக்கப்படுகின்றன. நோய் வருவதற்குக் காரணம் சுத்தமும் சுகாதாரமும் அற்ற வாழ்க்கை முறையே ஆகும். இதனை அறிந்த அக்காலத் தமிழர் ஆரோக்கியமான இயற்கை உணவுகளை உண்டு நோய் வராமல் உடலைப் பேணிக் காத்துள்ளனர்.

**தீட்டாத அரிசி (கைக்குத்தல் அரிசி)**

தீட்டாத அரிசியில் உடலுக்குரிய ஊட்டச் சத்துக்கள் (வைட்டமின்கள்) நிறைந்துள்ளன என்பது இக்கால மருத்துவர்களின் கருத்தாகும். இந்த உண்மையை அக்கால மக்கள் அறிந்திருந்த செய்தியை,

**அவையா அரிசி அம்களியது பூவை**

என்னும் பாடலடி சுட்டுகிறது.

**புழுக்கு**

புழுக்கு என்பது சங்க காலத்தில் வழக்கில் இருந்த ஓர் உணவுப் பொருளாகும். இப்போதைய வழக்கில் இது சர்க்கரைப்

பொங்கல் என அழைக்கப்படுகிறது. நன்றாக வேகவைத்த பருப்பினைக் கொண்டு இதனை ஆக்குவர். இதனை,

**"புகரிணர் வேங்கை வீகண்டன்ன**
**அவரை வான் புழுக்கட்டி"**

என்னும் பெரும்பாணாற்றுப்படை வரிகள் சுட்டுகின்றன.

**ஊறுகாய்**

மாங்காயைப் பல துண்டுகளாக அரிந்து அதில் மிளகுப் பொடி கலந்த கறிவேப்பிலையைத் தூவி ஊறுகாய் ஆக்கினர் என்பதை,

**"கஞ்சக நறுமுறி அளைஇப் பைந்துணர்**
**நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த"**

என்னும் வரிகள் சுட்டுகின்றன.

**அப்பம்**

அப்பம் என்பது இனிப்புப் பலகார வகைகளில் ஒன்றினைக் குறிக்கிறது. இதனை,

**"காரகற் கூவியர் பாகொடு பிடித்த**
**இழைசூழ் வட்டம் பால் கலந்தவை போல்"**

என்னும் வரிகளில் அப்பத்தைப் பாகோடு கலந்து வட்டமாகச் செய்தனர் என்று அப்பம் செய்யும் முறையைப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.
பழந்தமிழர்கள் அந்தந்த நிலத்தில் கிடைக்கக்கூடிய காய், கறி, கீரை, பழங்கள், கிழங்குகள் முதலியவற்றையும், திணை, நெல், போன்ற தானிய வகைகளையும் உணவாகப் பயன்படுத்தினார்கள். வாழைப்பழம், பலாப்பழம், இளநீர், நுங்கு, பால்பொருட்கள் போன்றவற்றையும் உணவாகப் பயன்படுத்தினர்.

**வாழைப்பழம்**

முக்கனிகளில் ஒன்றான வாழைப்பழத்திற்கு தனிப்பட்ட சிறப்பு உண்டு. இறைவனை வழிபட்டாலும் விழாக்கள் நடத்தினாலும் வெற்றிலை, பாக்கு, தேங்காய், இவற்றோடு வாழைப்பழத்தையும் கொடுக்கும் தமிழரின் வழக்கம் அதன் சிறப்பினை உணர்த்துகிறது. பழந்தமிழர் வாழைப்பழத்தை உணவுப் பொருளாகப் பயன்படுத்தியதை,

**கவைமுலை யிரும்பிடிக் கவுள்**
**மருப்பேய்க்கும்**
**குலைமுதிர் வாழைக் கனி வெண்பழம்"**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**பலாப்பழம்**

முக்கனிகளுள் சிறந்தது பலாப்பழம். காஞ்சி நகரத்தின் சிறப்பைக் கூறவந்த உருத்திரங்கண்ணனார், அந்நகரத்தைப் பலாப்பழத்தின் சிறப்போடு ஒப்பிட்டுக் கூறுகிறார். இதன் மூலம் பழந்தமிழர்கள் பலாப்பழத்தை உணவுப் பொருளாய் பயன்படுத்தியதை அறியமுடிகிறது.

## முடிவுரை

"வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுவதும் வாழ்க்கைக்கு தேவையான கருத்துக்களைக் கூறி வழிகாட்டுவதும் இலக்கியம் ஆகும். வாழ்க்கையை மொழிவாயிலாக வெளிப்படுத்துவதே இலக்கியம் "என்னும் (மு.பி.பாலசுப்பிரமணியனின்) கூற்றும் மெய்ப்பிக்கிறது. அவ்வகையில், பத்துப்பாட்டு நூல்களில் சிறந்து விளங்கும் இப்பெரும்பாணாற்றுப்படை காட்டும் சங்ககால மக்களின் வாழ்க்கைமுறைகள், நாகரிகம் பண்பாடு, பழக்கவழக்கங்கள், பல்வேறு தொழில்கள், பொழுது போக்கு, பண்டைத் தமிழர் வாணிபம் ஆகியன குறித்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

## குறிப்பு


1. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை மு.வரதராசனார்.
2. குறிஞ்சிக்கலி வழித்துணை விளக்கம் முன்னுரை எஸ்.ஆர். மார்க்கபந்து
3. இராசமாணிக்கைார். மா(1970), பத்துப்பாட்டு ஆராய்ச்சி, கசன்டைப் பல்கடலக் கழக கவளியீடு.
4. ஞாைபுஷ்பம், இரா. (1990), தமிழில் பயண இலக்கியம், ஐந்திடணப் பதிப்பகம், கசன்டை.
5. பக்தவத்சல பாரதி(2019), பண்பாட்டு அடையாளம் பதிப்பகம், திருச்சி.